# ஆபரேஷனல் எனர்ஜி குரூப் இந்தியா லிமிடெட்
# (முன்பு ஸ்ரீ பாலகணபதி மில்ஸ் லிமிடெட்)

CIN : U17111TN1994FLC028309

பதிவு அலுவலகம் : எண். 37/2ஏ, ஸ்ரீவில்லிபுத்தூர் - சிவகாசி பிரதான சாலை, மல்லி கிராமம், ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 141

கார்ப்பரேட் அலுவலகம் : ஏ, 5வது மாடி, கோகுல் ஆர்கேட், கிழக்கு விங், எண். 2 மற்றும் 2ஏ, சர்தார் படேல் சாலை, அடையாறு, சென்னை - 600 020. போன் : 044-43949300

## அறிவிப்பு

தபால் ஓட்டு படிவத்தில் குறிப்பிட்டுள்ளபடி ஆர்டிகல்ஸ் ஆப் அசோசியேஷனில் புதிய ஷரத்தை மேற்கொள்ளுதல், அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்தை உயர்த்துதல், மெமரண்டம் ஆப் அசோசியேஷனில் மூலதனப் பிரிவில் மாற்றம் செய்தல், கம்பெனியின் செலுத்தப்பட்ட மூலதனம் மற்றும் ப்ரீ ரிசர்வுகளையும் சேர்த்துள்ள தொகையோ அல்லது ரூபாய் 150 கோடி, இந்த இரண்டில் எது அதிகமோ அந்த அளவிற்கு கடன் நிலையை உயர்த்துதல், கடன் வாங்கும் தன்மைக்கேற்ப கம்பெனியின் தற்போதைய மற்றும் எதிர்காலத்தில் உள்ள அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் மீது அடமானங்களை உருவாக்குதல், மெமரண்டம் ஆப் அசோசியேஷனில் உட்பிரிவில் மாற்றம் கொண்டு வருதல், மெமரண்டம் ஆப் அசோசியேஷனில் இதர பொருள் உட்பிரிவுகளை நீக்கம் செய்தல், கம்பெனியின் பதிவு அலுவலகத்தை ஒரு மாவட்டத்தில் இருந்து மற்றொரு மாவட்டத்திற்கு மாற்றுதல், கடன் வழங்குதல் அல்லது உத்தரவாதம் அளித்தல் அல்லது கடன் பெறும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கோ அல்லது தனி நபருக்கோ உத்தரவாதம் அளித்தல் அல்லது கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 186-ன் கீழ் முதலீடுகளை உருவாக்குதல் ஆகியவற்றுக்கு ஒப்புதல் பெறுவதற்காக உறுப்பினர்களுக்கு தபால் ஓட்டு படிவம் மற்றும் உறுப்பினர்களின் சுய முகவரியிட்டு தபால் தலை ஒட்டப்பட்ட வர்த்தக உறையுடன் கூடிய தபால் ஓட்டு அறிவிப்பு அனுப்பும் பணியை கம்பெனி 01.06.2016 அன்றுடன் நிறைவு செய்துள்ளது என்று கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 110-ன் கீழ் கம்பெனிகள் விதி 2014 விதி 22-ன் படி (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) உறுப்பினர்களுக்கு இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

அனைத்து உறுப்பினர்கள், 30 மே, 2016 திங்கட்கிழமை அன்று உறுப்பினர் பதிவேட்டில் இடம் பெற்றுள்ளவர்கள்/பலன் பெறும் உரிமையாளர்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ளவர்களுக்கு இந்த அறிவிப்பு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 30 மே 2016, திங்கட்கிழமை அன்று வாக்களிக்கும் உரிமை உள்ள உறுப்பினர்கள் கணக் கெடுக்கப்பட்டுள்ளனர். தபால் வாக்கெடுப்பை வெளிப்படையாகவும் நம்பகத் தன்மையுடனும் நடத்தும் விதத்தில் மெசர்ஸ் வி கே எஸ் அசோசியேட்ஸ், பிராக்டிசிங் கம்பெனி செக்ரட்டரீஸ், சென்னை அவர்களை பரிசோதகராக கம்பெனியின் இயக்குனர்கள் குழு நியமித்துள்ளது.

உறுப்பினர்கள் தபால் ஓட்டு படிவத்தை மட்டுமே பயன்படுத்த முடியும். தபால் ஓட்டு மூலமான வாக்குப் பதிவு 2 ஜுன் 2016 வியாழக்கிழமை (இந்திய நேரப்படி காலை 9.00 மணி) துவங்கி 24 ஜுன் 2016, வெள்ளிக்கிழமை (இந்திய நேரப்படி மாலை 5.30 மணி) அன்று நிறைவு பெறும்.

பூர்த்தி செய்யப்பட்ட தபால் ஓட்டு படிவம் கையொப்பமிடப்பட்டு, மெசர்ஸ் வி கே எஸ் அசோசியேட்ஸ், பரிசோதகர், FF2, 95/5, ஏவிஎம் காலனி, 3வது தெரு, விருகம்பாக்கம், சென்னை - 600 092 அவர்களுக்கு 24 ஜுன், 2016 வெள்ளிக்கிழமை அன்று (இந்திய நேரப்படி மாலை 5.30 மணி) அலுவலக பணி நேரத்திற்கு முன்னதாக வந்து சேரும்படி அனுப்பி வைக்க வேண்டும் என்று உறுப்பினர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். 24 ஜுன், 2016 வெள்ளிக்கிழமை அன்று அலுவலக நேரம் முடிந்த பின் (இந்திய நேரப்படி மாலை 5.30 மணி) உறுப்பினர்களிடமிருந்து வரும் தபால் ஓட்டுகள், உறுப்பினர்களிடம் இருந்து எந்தவித பதிலும் தரப்படவில்லை என்பதாக கருதப்படும்.

தபால் ஓட்டு அறிவிப்பு மற்றும் படிவத்தை எங்களது இணைய தளம் www.oegindia.com மற்றும் www.sribalaganapathymills.comலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். உறுப்பினர்களுக்கு நகல் தபால் ஓட்டுப் படிவம் அல்லது தபால் ஓட்டு அறிவிப்பு தேவைப்பட்டால் investor@cameoindia.com என்ற முகவரிக்கு மின் அஞ்சல் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

27 ஜுன், 2016 திங்கட்கிழமை அன்று கம்பெனியின் பதிவு/கார்ப்பரேட் அலுவலகத்தில் தபால் ஓட்டு முடிவு அறிவிக்கப்படும். பரிசோதகர் அறிக்கையுடன் கூடிய முடிவுகள் கம்பெனியின் பதிவு அலுவலகம்/கார்ப்பரேட் அலுவலகத்தில் வைக்கப்படும் மற்றும் கம்பெனியின் இணையதளம் www.oegindia.com மற்றும் www.sribalaganapathymills.comலும் வெளியிடப்படும்.

தபால் ஓட்டுப் பதிவு குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/குறைகள் இருப்பின் அது குறித்து எஸ்.வி. நடராஜன், இயக்குனர் அவர்களுக்கு எழுத்து பூர்வமாக கம்பெனியின் பதிவு அலுவலகம்/கார்ப்பரேட் அலுவலகத்திற்கோ அல்லது investor@cameoindia.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்குமாறு உறுப்பினர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆபரேஷனல் எனர்ஜி குரூப் இந்தியா லிமிடெட்டிற்காக
ஒப்பம்/-
ஜார்ஜ் ஜேமிதாஸ்
இயக்குனர்

தேதி: 02.06.2016
இடம் : ஸ்ரீவில்லிபுத்தூர்